

சேப்பாக்கம் பகுதி 114அ வட்டத்திற்கு உட்பட்ட சி.என்.கே தெருவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான செம்மொழி நாளில் சேப்பாக்கம் பகுதி கழக செயலாளரும் மண்டலக் குழுத் தலைவர் எஸ் மதன்மோகன் எம்.சி. கழகக் கொடி ஏற்றி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார் உடன் வட்டச் செயலாளர் தமீம் அன்சாரி மற்றும் வட்டத்திற்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், கழகத் தோழர்கள் திரளாக பங்கேற்றனர்.

முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா !

## முதியோர் இல்லத்தில் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க. வர்த்தகர் அணி சார்பில் அசைவ உணவு வழங்கி கொண்டாட்டம் !

### லயன் வீ.தியாகராஜன் ஏற்பாடு! வை.ம. அருள்தாசன் பங்கேற்பு

சென்னை,ஜுன்.5-

சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக வர்த்தகர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் செம்மொழி நாயகர் ஐயா கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ ஆலோசனைப்படி திருவொற்றியூர் மேற்கு பகுதி கழகச் செயலாளர் வை.ம. அருள்தாசன் தலைமையில் திருவொற்றியூர் விம்கோ நகரில் உள்ள ரெகோபாத் ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி முதியோர் இல்லத்தில் உள்ள ஆதரவற்றோருக்கு அசைவ மட்டன் உணவு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் திருவொற்றியூர் மேற்கு பகுதி துணைச் செயலாளர் யு.எஸ். குறளரசன் மூன்றாவது வட்ட அவை தலைவர் வி.கே.ஏழுமலை மீனவரணி மாவட்ட தலைவர் ஆர். நவக்குமார் முன்னாள் கவுன்சிலர் எஸ்.இளங்கோ மாவட்ட பிரதநிதி என். ராம்குமார் பழக்கடை ஆர்.வேலாயுதம் எஸ்.வி.முருகன் கே.எஸ் .கோபி அம்மையப்பர் சேவை மையத்தின் ஏ.சி.எல் சீனிவாசன் எஸ் .செல்லதுரை மூன்றாவது வட்ட பொருளாளர் எம். ராஜா எஸ்.மகேஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 183 வது வட்டத்தில் வட்ட செயலாளர் பி.எஸ். ஆறுமுகம் தலைமையில் கழக கொடி ஏற்றி இனிப்பு வழங்கினார்கள். மாவட்ட பிரதிநிதி ஆ. தமிழ்ச்செல்வன் ஏற்பாட்டில் 500 பேருக்கு காலை சிற்றுண்டி உணவினை வழங்கினார்கள். இந்நிகழ்வில் பாலவாக்கம் க.சோமு, தமிழரசிசோமு, த.விஜயபாலன், மகேஷ்குமார், சிவா, கோபால் தேசப்பன், வேலு, ரமேஷ்பாபு, தேவசுதன், சந்தோஷ்குமார், டேனியல் சண்முகம், செல்வகுமார், பொன்முடி, தமீம்முனிஷா, பாக்யராஜ், ஹரிராம், பெருமாள், முகமதுமிஷின், முகமது இலியாஸ், ரமிமதுல்லா, சாதிக், நாகேஷ், ராஜசேகர், மொய்தீன், பாண்டியன், டேவிட், மனோகரன், சுரேஷ் உள்ளிட்ட கழக தோழர்கள் கலந்துகொண்டனர்.

வட்ட பொறுப்பாளர் சைதை ஆ.வரதன் ஏற்பாட்டில்

## சைதை 169 (அ )வட்டத்தில் கலைஞர் 102 வது பிறந்த நாள் விழா!

### 1000 பேருக்கு அறுசுவை உணவு! துணை மேயர் மு.மகேஷ்குமார் வழங்கினார்!

சென்னை, ஜுன் 5 -

சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 169 (அ )வட்டத்தில் தமிழ்நாட்டின் நவீன சிற்பி கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு வட்டத்தில் உள்ள காந்திபுரம், சுப்பு பிள்ளை தோட்டம், மசூதி தோட்டம், மாடல் அட்மின் ரோடு, பேன் பேட்டை, தாடண்டர் நகர், அரசு பண்ணை, ஜோதி அம்மாள் நகர்,ஆகிய பகுதிகளில் கழக இரு வண்ண கொடி ஏற்றி டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது... அன்று மதியம் 12.00 மணி அளவில் அப்பாவு நகர் பகுதியில் 1000,பேருக்கு அசைவ உணவுவை தலைமை செயற்குழு



உறுப்பினரும் பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், பகுதி நிர்வாகி, மு.பாக்கிய லட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் என். நந்தகோபால், சைதை ஏ. மஜீத் வட்ட கழக நிர்வாகிகள் வே. கோதண்டம், டி,கண்ணன். மு சாந்தி, கேபிள் சம்பத், எம். பாபு, கே.பி.மகேஷ், பா. செல்ல பாண்டியன், ஏ. எஸ்.ரியாஸ் அகமது, அணிகளின் நிர்வாகிகள் எஸ்.கரிமுல்லா, ஏ.சுப்பிரமணி, எஸ்.ஏ. மோகன் குமார், ரா.தமிழன்பன், ஆ. தேவகுமாரன்,

கி. சிவப்பிரகாஷ், ராஜா சம்பத் எம் மணவாளன், ஆர். எஸ். டி. கோட்டி, லோ.குமார் இ.ராஜ், ஆ. கோபாலகிருஷ்ணன், எம் அருண்குமார், சி. வீரா, எம் சாம், இ. மைதிலி,எம் நூர்ல்லா, எஸ். சௌரி முத்து, சி.செல்வதுரை,க. ரஞ்சித், சிவபிரசாத், ஆர். ராஜா, சி.கே.பாபு, ஆர். கார்த்திக், எஸ்.கே. எஸ். ஷெரீப்,

பா.மணிகுமார், இள.அரவிந்தன், அ.ரிஷி குமார், ஆ.பிரேம்குமார், இரா.எழிலன், பா.செ. நிக்கேஷ், ஆர். சுபாஷ், வட்ட செயற்குழு : உறுப்பினர்கள்.. சைதை மணி, ஏ. மாரி, சே. கதிரவன், அங்கையா, எஸ்.சகாயம், கழக முன்னோடிகள் எஸ். துரை, தட்சிணாமூர்த்தி, ராஜாராம், கேபிள் சீனு, தமிழ்ச்செல்வன், கருணாமூர்த்தி, ஏ.அருள், கே. ஆர். எஸ். ராஜேந்திரன், தாடி குமார், அன்பழகன், வடிவேல், நைனி,ஏ. ஆனந்த், சரத்குமார், ராசாத்தி, பரணிபாய்,அலமேலு, மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

## 2006 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்!

### அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

திருவெறும்பூர், ஜுன் 5 -

தமிழக முதல்வர் கடந்த மாதம் 9ம் தேதி திருச்சி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நலத்திட்ட பணிகள் தொடக்க விழாவில் திருச்சி மாவட்டத்திற்கு உட்பட்ட 54,000 ஏழை எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கும் பணியை தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக ஏழை எளிய மக்கள் குடியிருக்கும் வீட்டிற்கான பட்டா வழங்க வேண்டும் என்பதே தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் லட்சியம். திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு தெற்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 2006 பயனாளிகளுக்கு வீட்டு மனை பட்டாக்களை வழங்கிசிறப்புரையாற்றினார் .நடந்த விழாவில் 23 திருநங்கைகள் உட்பட 2006 பேருக்கு இலவச வீட்டு மனைகளை வழங்கினார் . நிகழ்வானது திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி அரியமங்கலம் கோட்ட அலுவலகம் மற்றும் திருவெறும்பூர் ஒன்றிய அலுவலகம் துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் மண்டலம் மூன்றின் தலைவர் மு.மதிவாணன், துவாக்குடி நகர மன்ற தலைவர் காயம்பு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் கங்காதரன், கருணாநிதி, பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, பகுதி கழகச் செயலாளர் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், திருச்சி டி.ஆர்.ஓ.ராஜலட்சுமி, ஆர்.டி.ஓ.அருள், திருவெறும்பூர் தாசில்தார் ஜெயபிரகாசம், செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராமன் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இலவச வீட்டு மனை பட்டாக்களை தமிழக பள்ளி கல்வி அமைச்சர் அன்பில் மகேஸ பொய்யாமொழி வழங்கி பேசியதாவது:-

தமிழக மக்களை பெரிதும் நேசிக்கும் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழாவில் திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட சுமார் 2000த்திற்கும் மேற்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்குவது அவருக்கு புகழ் சேர்ப்பதாகும். கையளவு நிலம் இருந்தாலும் அது சொந்த நிலமாக இருக்க வேண்டும் என எல்லோரும் நினைப்பார்கள் தற்பொழுது வீட்டுமனை பட்டா வழங்கியவர்களில் தகுதியானவர்களை கண்டறிந்து கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு வீடு கட்டி தரப்படும் என்றும் மேலும் நீதிமன்ற குறுக்கீடு உள்ளிட்ட காரணங்களால் வீட்டுமனை பட்டா வழங்க முடியாதவர்களை நாங்கள் கைவிட மாட்டோம் என்றும் உங்களை பாதுகாப்போம் உங்கள் ஆனந்தத்தோடு தற்பொழுது நானும் ஆனந்தமாக கலந்து கொள்கிறேன் என்றார்.

கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக கலைஞர் பிறந்தநாள் விழா -

## தமிழ் பாடத்தில் முழு மதிப்பெண் மாணவிகளுக்கு பாராட்டு!

### அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது !

கத்தார்,ஜுன்.5-

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஜுன் 3 அன்று செவ்வாய் இரவு 08.00 மணியளவில் ஜாத்தர் (ரமதா சிக்னல் அருகில் )Zaatar Restaurant பிறந்தநாள் விழா கத்தார் திமுக அயலக அணி அமைப்பாளர் மதன் குமார் ஒருங்கிணைப்பில், துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், ஜி.எஸ்.ஆர். சத்தியராஜ், பரந்தாமன், ஹக்கீம் மற்றும் ரபீக் அவர்களின் முன்னிலையிலும் கேக் வெட்டி, அறுசுவை உணவு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேலும் கத்தார் திமுக அயலக அணி இளைஞரணி செயலாளர் மற்றும் நிர்வாகிகளான செந்தில், குரும்பூர் தாஹிர், விக்னேஷ், சதீஷ், பவித், இப்திகார், சவுக்கத் அலி,அருள், சுதானந்தம், கங்காதரன்,மெய்யநாதன், ஷேக் அப்துல்லா, பங்கேற்புடன் நடைபெற்ற நிகழ்வில்

கத்தாரில் முதன்முறையாக, திருமதி வாசுகி சத்ய பாபு மற்றும் வானேஸ்வரி மோகன் குமார் ஆசிரியர்களின் மாணவிகளான தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று அசாதாரணமான சாதனை படைத்த தங்க மகள்கள் ரம்யா மற்றும் ராஜ்ரீ இருவருக்கும் கலைஞர் பிறந்த ஜுன் 3 நாளில் கத்தார் அயலக திமுக NRTIA Qatar சார்பில் கேடயம் வழங்கி பாராட்டு விழாவும் நடைபெற்றது.

இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள்,கத்தார் வாழ் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகள் மோகன் குமார்,திரு.ரவீந்திர பிரசாத்,. ராம செல்வம், வலியுல்லா உசேன்,திரு.இப்ராஹிம் யாசின், திரு.முகிலன், ரியாஸ், தொகுப்பாளர் ஆர்.ஜே. மிரண்டா, சிங்க பெண்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



முத்தமிழ் அறிஞர் தமிழனத்தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சிவந்தி ஆதித்தன் நகரில் சோழவரம் தெற்கு ஒன்றிய இளைஞரணி சார்பாக ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.எஸ்.மணிகண்டன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் ஆலோசனைப்படி ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் அவர்கள் தலைமைதாங்கி துப்புரவு பணியாளர்களுக்கு நலதிட்ட உதவிகளும் பொதுமக்களுக்கு இனிப்புகளையும் வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருவெற்றியூர் ஆர்.டி.மதன்குமார் முன்னிலை வகித்தார். இதில் காசிம்முகமது, பொன்கோதண்டன், நா.பரசுராமன் எம்.ஜி.கார்த்திக், எம். ஜெகன், ஆர்.சி.சிவசங்கரன் இளைஞரணி நிர்வாகிகள், ஜீவா, கார்த்திக் ராஜா, நித்தியானந்தம், ஹரிஷ், விக்கி, ஹரி, ஜெகன், லோகேஷ், கவின், சூர்யா, சத்யா, தமிம் அன்சாரி ஆகியோர் சிறப்பித்தனர்.



இராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் நகரத்தில் தமிழினத் தலைவர் கலைஞரின் 102 வது பிறந்தநாள் விழா தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளர் பிடிசி.ஜி.செல்வராஜ் தலைமையில் நகர கழக செயலாளர் மற்றும் நகர் மன்ற தலைவர் நாசர் கான் அவர்கள் மற்றும் தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் பாஸ்கரன் முனைவர் ஆர் வரதன் முன்னிலையில் திமு கழக தொண்டர்கள் உடன் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில்

## சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 இலச்சினை வெளியீடு!

### துணை மேயர் மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை,ஜுன்.5-

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து நடத்தும் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0 மேயர் திருமதி ஆர். பிரியா தலைமையில் நேற்று (04.06.2025) ரிப்பன் கட்டட வளாகம், அம்மா மாளிகை கூட்டரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் மேயர் சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0க்கான இலச்சினையினை வெளியிட்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திறந்தவெளியினை சிறுநீர் மற்றும் மலம் கழித்தல் என கழிப்பிடமாகப் பயன்படுத்தும் இடங்களைக் கண்டறிந்து வரைபடமாக்குதல், விழிப்புணர்வுப் பிரச்சாரம் (#OnceinAloo), கழிவறைகளைத் தத்தெடுத்தல் மற்றும் அமைத்துத் தருதல் (Adopt a Toilet / Donate a Toilet), கழிப்பறைகளைப் பராமரிக்க பொதுமக்கள், நிறுவனங்கள், சமூக அமைப்புகளை ஊக்குவிக்கும் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளைத் தொடங்கி வைத்தார்.

ஒரு மாதம் முழுவதும் நடைபெறும் இந்த சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0வில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு முக்கியமான நிகழ்வுகள் மூலம் கழிப்பறை பற்றிய உரையாடல்கள் சென்னை மாநகரம் முழுவதும் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தின் மாற்றத்திற்காக கழிப்பறைகள் பற்றி பல கோணங்களில் பேசி, விவாதித்து, மாற்றத்திற்கான ஒரு வாய்ப்பினை உருவாக்க ஏதுவாக, இந்நிகழ்வில் பங்கேற்க ஊடகத்தினர், கல்வி நிறுவனங்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் மு.மகேஷ் குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், தூய்மை தமிழ் நாடு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஆர்.வி. ஷஜீவனா, கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, வட்டார துணை ஆணையாளர்கள் கே.ஜெ.பிரவீன் குமார், (மத்தியம்), எம்.பி.அமித், (தெற்கு), கட்டா ரவி தேஜா, (வடக்கு), தலைமைப் பொறியாளர் (பொது) திருமதி எஸ். ராஜேஸ்வரி, வாஷ்லேப் நிறுவனர் கங்கா திலீப், இயக்குநர் செபின் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



டி.யு.சி.எஸ். திராவிட தொ.மு.ச.சார்பில் முத்தமிழறிஞர்கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா டியுசிஎஸ்.திராவிட தொ.மு.ச பொதுச்செயலாளர் இராஜன்சாமிநாதன் தலைமையில் மாநில பொதுச்செயலாளர் சு.பத்மநாபன் அறுசுவை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் டி.யு.சி.எஸ். திராவிட தொ.மு.ச.தலைவர் ஆ.எம்பிநாதன்,பொருளாளர் ந.பிரபாகரன், ஜெ.இரவிச்சந்திரன், ஆர்.முத்து, எஸ்.ரவி, மலர்மன்னன், முத்துச்செல்வன், கதிரவன், கஜேந்திரன், சங்கர், தினகரன், சதீஷ், சக்திவேல், சூரேசன்,சரவணன், சுந்தரவேல், முருகேசன், கோமளா, ஜெயந்தி,சரளா, பார்த்தசாரதி, குணசேகரன், கோகுல், கோவிந்தராஜ், மீனாட்சி, விஜய், செகதீஷ்உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள் விழா சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் அலமாதி ஊராட்சியில் அடங்கிய எடப்பாளையத்தில் நடைபெற்றது. இதில் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்க்கு மலர் அஞ்சலி செலுத்தி ஏழை எளிய மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசிம் முகம்மது. மு.கீதாராமன், ஆ.து. .மணி, தமிழ்வானன், எம்.முகம்மதுஅலி. கு.கலைவாணன், நா.பரசுராமன். ஏ.பி.சந்திரன், பாஸ்கர், எம். முனுசாமி, ஏ.முனுசாமி, டி.பத்மநாபன், எம்.ஜி.கார்த்திக், எம். அன்பு, லிங்கமூர்த்தி, வாசு. புருஷோத்தம்மன், என்.முகம்மதுஅலி, ஜி.ஆர்.பத்மநாபன், ஜெகன், சிவசங்கர், செல்வகுமார். எஸ். கே.மணி, க.பிரபு மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை உப்பரபாளையம் கிளை செயலாளர் சி.சந்திரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதலின்படி, வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி, திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழ்செல்வி சசிகுமார், 76 வது வட்டக்கழக செயலாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் மாவட்ட பிரதிநிதி கி. நாகலிங்கம், 76 ( அ ) வட்ட துணை செயலாளர் சத்யா நாகலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பகுதி பிரதிநிதி பி.வினோத் ஏற்பாட்டில் பகுதி 76 (அ) வட்டத்திற்கு உட்பட்ட கே.எம்.கார்டன், பகுதி 1வது தெரு, அம்பேத்கர் மன்றம் அருகில் அப்பகுதி வாழ் மக்களுக்கும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். இந்நிகழ்வில் கொருக்குப்பேட்டை இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜோதி, பி. மணிமாறன், எம்.விமல்ராஜ் ( BLA2 ), டி.கார்த்திக், ஏ.கமல், கே.சஞ்சய் மற்றும் கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.